DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : ராஜேஷ்வரி | Father/Husband Name : பழனிச்சாமி |
| Age : 43 | Village : அம்மையார்பட்டி |
| Taluk : | Calling : கூலி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Feb 10, 2026 5:10 PM

(Accused Present)

**<u>முதல் விசாரணை</u>** :-

1. நான் அம்மையார்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன்.

2. ஆஜர் எதிரி எனது கணவர் ஆவார். கடந்த 21.04.2022ம் தேதி மாலை நேரத்தில் நான் எனது வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரி குடித்துவிட்டு வந்து என்னிடம் குடிப்பதற்கு பணம் கேட்டார். என்னிடம் பணம் இல்லாததால் நான் கொடுக்கவில்லை. அதனால் அவர் என்னை தலைமுடியை பிடித்து கையால் குத்தினார். அதை தட்டிகேட்க வந்த எனது சித்தப்பா குமாரையும், எனது தம்பி சரவணக்குமாரையும், என்னையும் "மயித்த புடுங்க எங்க வீட்டுக்கு வர்ற என்று திட்டினார். என்னை பார்த்து தெருவில் வைத்து தேவிடியாக கூதி மகளே, பலவட்ர கூதி மகளே துட்டு குடுட தேவிடியா" என்று திட்டினார். இதனால் எனக்கு கை கால் ஓடவில்லை.

3. பின்னர் எனது சித்தப்பா குமாரை பார்த்து "ஒக்க புண்டை எதுக்குடா என் வீட்டுக்கு வர்ற" என்று கூறினார். எதனால் சம்பவம் நடைபெற்றது என்றால் அவர் வழக்கமாக சுதந்திரமாக சுற்றுவதற்கும் குடிப்பதற்கும் என்னிடம் பணம் கேட்டு வந்தார். நான் பணம் கொடுத்து வந்தேன். குடியால் தான் இந்த சம்பவம் நடைபெற்றது. நான் நடந்த சம்பவத்திற்கு எனது கணவர் மீது புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு போலீசாரிடம் நான் கொடுத்தது தான். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **<u>(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)</u>** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

4. நான் தற்போது என்னுடைய குழந்தைகளுடன் என்னுடைய அம்மா வீட்டில் வசித்து வருகிறேன். நேற்று என்னுடைய அப்பா இரவு காவலாளி வேலைக்கு சென்று விட்டு. காலையில் வீட்டிற்கு வந்து படுத்து இருந்தார். நான் ஃபயர் ஆபீசில் வேலைக்கு சென்று விட்டேன். மதியம் சுமார் இரண்டு மணி அளவில் இந்த வழக்கின் எதிரியான என்னுடைய கணவர் என்னுடைய அம்மா வீட்டிற்கு வந்து இந்த வழக்கை வாபஸ் வாங்க சொல்லி என்னுடைய பெற்றோர்களை அசிங்க அசிங்கமாக பேசியுள்ளார். (சாட்சி அழுது கொண்டே கூறுகிறார்) என்னுடைய கணவரை அவருடைய வீட்டிற்கு கொண்டு விட்டும் அவர் மீண்டும் மீண்டும் மது போதையில் வந்துள்ளார். இந்த சம்பவத்தை என்னுடைய மகன் அவனுடைய செல்போனில் வீடியோ எடுத்து வைத்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

5. சாட்சி கணேஷ் குமார் என்னுடைய மகன் என்றால் சரிதான். சாட்சி திருமலை குமார் என்னுடைய சித்தப்பா என்றால் சரிதான். சாட்சி பழனிசாமி என்னுடைய தம்பி என்றால் சரிதான், அவர் என்னுடைய சித்தப்பா மகன் என்றால் சரிதான். சாட்சி சரவணகுமார் என் உடன் பிறந்த தம்பி என்றால் சரிதான். எதிரி என்னுடைய கணவர் என்றாலும், எனக்கு மாமா மகன் என்றாலும் சரிதான். எதிரி கொத்தனார் வேலை செய்கிறார் என்றால் சரிதான். நான் செவல்பட்டியில் உள்ள ரவிசங்கர் என்பவரின் பயர் ஆபீசில் வேலை செய்கிறேன் என்றால் சரியல்ல, ஆனால் செவல்பட்டி அருகே உள்ள ஒரு பயர் ஆபீஸில் வேலை செய்கிறேன்.

6. எனக்கும் எதிரிக்கும் திருமணமாகி 26 ஆண்டுகள் ஆகிறது. எங்களுடைய திருமணத்தின் பலனாக ஒரு ஆண் மற்றும் இரண்டு பெண் குழந்தைகள் உண்டு என்றால் சரிதான். எங்களுடைய முதல் மகள் காயத்ரியை எங்கள் ஊரில் உள்ள சக்தி முருகன் என்பவருக்கு 2020 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொடுத்து, அவர்கள் தற்போது எங்கள் ஊரிலேயே வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எங்களுடைய முதல் மகள் காயத்ரியின் திருமண செலவுகள் அனைத்தையும் என்னுடைய கணவர் தான் செய்தார் என்றால் அதிகபட்சமாக ரூபாய் 5000/- வரை செலவு செய்திருப்பார். எனக்கு ஒரு சகோதரி மற்றும் இரண்டு சகோதரர்கள் என்றால் சரிதான். அவர்களுக்கும் திருமணம் ஆகி எங்களுடைய ஊரில்தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

7. நாங்கள் முதலியார் வடக்கு தெருவில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். என்னுடைய அப்பா, அம்மா, சகோதரர்கள் பிள்ளையார் கோவில் வடக்கு தெருவில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். என்னுடைய அப்பா வீடு இருக்கக்கூடிய தெருவிற்கும், என்னுடைய கணவர் வீடு இருக்கக்கூடிய தெருவிற்கும் இடையே இரண்டு தெரு இருக்கிறது என்றால் சரிதான். நான் தினந்தோறும் பயர் ஆபீசுக்கு வேலைக்கு சென்று விட்டு மாலை சுமார் 06:15 மணிக்கு வீட்டிற்கு வருவேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவ தேதியில் நான் வேலைக்கு சென்று இருந்தேன் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை, ஞாயிற்றுக்கிழமையாக இருந்திருந்தால் லீவு போட்டு இருப்பேன். எனக்கு சம்பவத் தேதியில் நான் வேலைக்கு சென்று விட்டேன் என்றாலும், அன்று மாலை 06.00 மணிக்கு தான் வீட்டிற்கு வந்தேன் என்றாலும், அதை மறைத்து ஞாபகம் இல்லை என்று கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

8. வழக்கு சம்பவம் நடைபெற்ற தேதியில் என்னுடைய கணவர் PSR கல்லூரிக்கு கொத்தனார் வேலைக்கு சென்று விட்டார் என்றால் என்னுடைய கணவர் கொத்தனார் வேலைக்கு ஆட்களை ஏற்பாடு செய்து விட்டு வீட்டிற்கு வந்து விடுவார். வழக்கு சம்பவத் தேதியில் என்னுடைய கணவர் PSR கல்லூரிக்கு வேலைக்கு சென்று விட்டு, வேலை பார்க்கும் நபர்களுக்கு சம்பளம் போட்டுவிட்டு இரவு 08.00 மணிக்கு தான் வீட்டிற்கு வருவார் என்றால் சனிக்கிழமை தான் சம்பளம் போடுவார்.

9. 2012 ஆம் ஆண்டு என்னுடைய தம்பி சரவணக்குமாருக்கு என்னுடைய கணவர் ரூபாய் 5,00,000/- லட்சம் செலவு செய்து வீடு கட்டி கொடுத்தார் என்றால் பொய்யாகும். என்னுடைய தம்பி கணேசுக்கு 2017 ஆம் ஆண்டு வாகன விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். என்னுடைய தம்பி மதுரையில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றாலும், அதற்கான செலவுகள் அனைத்தையும் என்னுடைய கணவர் தான்

பார்த்தார் என்றாலும் சரியல்ல, நாங்கள் எங்களுடைய நகைகளை அடகு வைத்து செலவு செய்தோம். என்னுடைய தம்பி சரவணகுமாருக்கு வீடு கட்டுவதற்கு கொடுத்த ரூபாய் 5 லட்சம் மற்றும் என்னுடைய தம்பி கணேஷ் குமாரின் மருத்துவச் செலவுக்கு கொடுத்த ரூபாய் 3,50,000/– ஆகியவற்றை திருப்பி கேட்ட போது, நானும் என்னுடைய உறவினர்களும் சேர்ந்து எதிரியிடம் பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. மேற்படி தொகையை வாங்கினால் தான் எங்களுடைய இரண்டாவது மகளுக்கு திருமணம் செய்து வைக்க முடியும் என்று என்னுடைய கணவர் கேட்டதால் எங்களுக்குள் அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டது என்றால் சரியல்ல.

10. மேற்படி பணம் தொடர்பான பிரச்சனைக்கு பஞ்சாயத்து செய்வதற்காக எங்களுடைய ஊர் நாட்டாமை தன்ராஜ் மற்றும் முருகன் ஆகியோர் வந்தார்கள் என்றாலும், சமரசம் பேசினார்கள் என்றாலும் அவர்கள் அந்த பிரச்சனைக்காக சமரசம் பேசவில்லை, என்னுடைய கணவர் என்னிடம் ரொம்ப சண்டை போட்டுக் கொண்டிருந்ததால் என்னுடைய மகன் முருகன் என்பவரை என்னுடைய கணவரிடம் பேசுவதற்காக அழைத்து வந்தார். எவ்வாறு சமரசம் பேசியபோது அந்தத் தொகையை தர முடியாது என்று கூறி நாங்கள் எதிரியை அனுப்பி விட்டோம் என்றால் சரியல்ல. மேற்படி தன்ராஜ் மற்றும் முருகன் ஆகிய இருவரையும் எதிரிகள் தரப்பில் சாட்சியாக விசாரணை செய்தால் அவர்கள் எதற்காக பஞ்சாயத்து பேச வந்தார்கள் என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான்.

11. இந்த வழக்கில் நடைபெற்றதாக கூறும் சம்பவம் எங்களுடைய வீட்டில் வைத்து நடைபெற்றது என்றால் வாசலில் வைத்து நடைபெற்றது. அந்த சம்பவத்தை பார்க்க நிறைய நபர்கள் கூடி விட்டார்கள் என்றால் சரிதான். நடைபெற்றதாக கூறும் சம்பவம் தொடர்பாக நான் கூறி தான் என்னுடைய மகன், சகோதரி மற்றும் தம்பிக்கு தெரியும் என்றால் என்னுடைய வீட்டிலிருந்து பார்த்தால் என்னுடைய சகோதரி வீடு தெரியும், ஆகையால் வழக்கு சம்பவம் நடைபெறுவதை தெரிந்து என்னுடைய சித்தப்பாவும் தம்பியும் உடனே அங்கே வந்து விட்டார்கள். இப்படி சம்பவம் நடைபெறும் போது என்னுடைய இரண்டாவது மகள் கங்கா லட்சுமி வீட்டில் தான் இருந்தார் என்றால் சரிதான்.

12. வழக்கு சம்பவம் நடைபெற்ற போது அங்கு வந்த என்னுடைய சித்தப்பா மற்றும் சகோதரரை என்னுடைய கணவர் அசிங்கமாக பேசினார் என்று நான் சாட்சியத்தில் கூறியுள்ள விபரங்களை நான் கொடுத்த புகார் மற்றும் போலீசார் வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் கூறியிருப்பேன். வழக்கு சம்பவம் நடைபெறும் போது யாரோ போலீசாருக்கு தகவல் கூறி போலீசார் வந்து விட்டார்கள் என்றால் சரிதான். அப்பொழுது போலீசார் என்னிடம் என்ன நடந்தது என்று விசாரணை செய்து எழுதி வாங்கி சென்றார்கள் என்றால் சரிதான். அப்பொழுது போலீசார் என்னிடமும் என்னுடைய கணவரிடமும் இது குடும்பப் பிரச்சனை என்றும், சண்டை போடாமல் இருங்கள் என்றும் அறிவுரை கூறிவிட்டு சென்றார்கள் என்றால் சரிதான். அதற்குப் பிறகு நாங்கள் ஊர் பெரியோர்களை வைத்து சமரசம் பேசினோம் என்றால் இல்லை.

13. இதற்குப் பிறகு என்னுடைய பெற்றோர்கள் மற்றும் தம்பி எனக்கு சொல்லிக் கொடுத்து என்னை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள் என்றால் சரியல்ல. காவல் நிலையத்திற்கு யாரெல்லாம் சென்றோம் என்றால் நான், என்னுடைய மகள் கங்கா, என்னுடைய சித்தப்பா, என்னுடைய தம்பி ஆகியோர் சென்றோம். காவல்

நிலையத்தில் வைத்து என்னுடைய தம்பி ஒரு புகார் மனு எழுதினார் என்றால் நான் தான் எழுதினேன். புகாரில் என்னுடன் வந்த என்னுடைய மகள், தம்பி மற்றும் சித்தப்பா ஆகியோர் சாட்சிகளாக கையொப்பம் செய்தார்கள் என்றால் கையொப்பம் செய்திருப்பார்கள்.

14. காவல் நிலையத்தில் வைத்தும் போலீசார் என்னிடம் குடும்பப் பிரச்சனை என்றும், சமரசமாக செல்லுங்கள் என்றும் கூறினார்கள் என்றால் போலீசார் என்னுடைய கணவரிடம் பணம் வாங்கிக்கொண்டு, அவருக்கு சாதகமாக செயல்பட்டார்கள். போலீசார் என்னுடைய கணவரிடம் பணம் வாங்கிக் கொண்டு என்னுடைய கணவருக்கு சாதகமாக செயல்பட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், அவ்வாறு செயல்பட வேண்டிய அவசியம் போலீசாருக்கு இல்லை என்றாலும் சரியல்ல. நான் போலீசாரிடம் என்னுடைய மனுவின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் தீ குளித்து விடுவேன் என்று கூறினேன் என்றால் எனக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்று தான் கூறினேன். வழக்கு சம்பவ காலத்தில் சாத்தூர் துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் எங்களுடைய உறவினரான போலீசார் தேவி என்பவர் வேலை செய்தார் என்றால் எனக்கு தெரியாது, ஆனால் அவருக்கும் இந்த சம்பவத்திற்கும் எவ்விதமான சம்பந்தமும் கிடையாது. எங்களுடைய உறவினர் தேவி அவ்வாறு வேலை செய்தார் என்றாலும், நான் தேவியிடம் கூறி தேவி காவல் துணை கண்காணிப்பாளரிடம் கூறி, அதற்குப் பிறகுதான் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

15. என்ன படித்துள்ளேன் என்றால் மூன்றாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுதப் படிக்க தெரியாது என்றால் வேகமாக படிக்கவோ எழுதவோ மாட்டேன், ஆனால் மெதுவா மெதுவாக படித்து எழுதுவேன். காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகாரை யார் எழுதினார் என்றால் (புகார் காண்பித்து கேட்கப்பட்டது) ரொம்ப ஆண்டுகள் ஆகிவிட்டதால் எனக்கு அது ஞாபகம் இல்லை. இந்த புகார், என்ன நடந்தது என்று போலீசாரிடம் கூறி அவர்கள் சொல்ல சொல்ல எழுதப்பட்டது என்றால் சரிதான்.

16. இந்த வழக்கு சம்பவத்தில் எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்றாலும், நான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக செல்லவில்லை என்றாலும் சரியல்ல, என்னுடைய கணவர் என்னுடைய தலை முடியை பிடித்து இழுத்ததில் என்னுடைய தலையில் வலி ஏற்பட்டது, அதற்காக நான் சரவணா மருத்துவமனைக்கு சென்று ஊசி போட்டுக் கொண்டேன்.

17. 2025 ஆம் ஆண்டு எங்களுடைய இரண்டாவது மகள் கங்கா லட்சுமிக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். அந்த திருமணத்தை என்னுடைய கணவர் தான் செய்து வைத்தார் என்றாலும், திருமணத்திற்கு நான் செல்லவில்லை என்றாலும் சரிதான். எதிரி என்னை ஆபாசமாக பேசினார் என்றும், தலைமுடியை பிடித்து இழுத்தார் என்றும் நான் மிகைப்படுத்தி கூறுகிறேன் என்றாலும், அவ்வாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. என்னுடைய கணவர் என்னுடைய தம்பிகளுக்கு செய்த செலவுகளுக்கான பணத்தை கேட்டபோது, பணத்தை கொடுக்கக் கூடாது என்பதற்காக இந்த புகாரை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

18. நேற்று என்னுடைய கணவர் என்னுடைய அப்பா வீட்டிற்கு சென்று

பிரச்சனை செய்ததாக கூறும் விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் கூறுவது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், என் மீது ஒரு ஆதங்கம் ஏற்படும் என்பதற்காக அதை மிகைப்படுத்தி கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. நான் கூறுவது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், இந்த வழக்கில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Feb 10, 2026 6:00 PM

Judicial Magistrate 2, Sattur